



உ

சிவமயம்

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி துணை

# நகரத்தார் சங்கம், பழநி

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை"

# அறிவிப்பு

## 2011 ம் வருஷம் டிசம்பர் மாதம் 17-ம் தேதி

"குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை"

**பழநி அன்னதான மடத்திற்கு எதிரில் அமைந்துள்ள வண்டிப்பேட்டை இடம் சம்மந்தமாக நடந்த விபரமும் தன்னிலை விளக்கமும் இதன்மூலம் நகரத்தார் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.**

வண்டிப்பேட்டை இடத்தில் 91 சென்ட்டில் 80 சென்ட் இடத்தை பழநி நகரத்தார் சங்கத்திற்கு விலைபேசி நெற்குப்பை பூசாரி செட்டியார் பழ.சுப.பழ.சுப்பிரமணியன் செட்டியார் மகன் சுப்பிரமணியன் செட்டியார் கண்டனூர் அருளாடியார் கு.ப.சுப.சு.சுப.பழநியப்பசெட்டியார் மகன் பழநியப்பசெட்டியார் ஆகிய இருவரிடமும் முன் பணமாக ஒரு லட்சரூபாய் கொடுத்து கிரைய ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொண்டுள்ளோம். அதன்பின் வண்டிப்பேட்டை இடத்தில் குடியிருந்த இரண்டு நபர்களை பெரு முயற்சி செய்து தொகைகள் கொடுத்து பெரும்பிரயாசைப்பட்டு காலி செய்தோம். காம்பவுண்ட் சுவர் ரிப்பேர் வேலை பார்த்து மேலே கம்பி அடைத்து மேற்படி இடத்தில் உள்ள கிணற்றை தூர்த்து (மூடி) இடத்தை சமன்படுத்தி மேற்படி வேலைகளை ஆத்தங்குடி அரு.கனகசபை செட்டியார் வலையபட்டி கரு.சிங்காரம் செட்டியார் இருவர் மூலமாக சுமார் ஐந்து லட்சரூபாய் செலவில் சீர்படுத்தி உள்ளோம்.

பழநிக்கு பலநூறு ஆண்டுகளாக பாதயாத்திரையாக வரும் பக்தகோடிகளும், காவடி சுமந்து வரும் காவடி சுவாமிகளும் தங்கி ஓய்வெடுப்பதற்கு நல்லதொரு விடுதி கட்டியும் அவர்களுக்கு தொண்டு செய்யும் எண்ணத்துடனும் பழநி நகரத்தார் சங்கம் மேற்படி முயற்சியில் இறங்கி மலேசியா, சிங்கப்பூர் மற்றும் நம் நாட்டில் அநேக நகரத்தார்களிடம் மேற்படி கருத்தை தெரிவித்து வசூல் செய்து வசூலான தொகையை பழநி இந்தியன் வங்கியில் டெபாசிட் செய்துள்ளோம். கிரைய ஒப்பந்தப் பத்திரம் எழுதிய பின் கண்டனூர் அருளாடியார் அவர்களுடைய பங்காளிச் செட்டியார் குப.சு.அரு.அருணாசலம் செட்டியார் அவர்கள் வண்டிப்பேட்டை இடத்தை வாங்கவோ விற்கவோ கூடாதென அறிவிப்பும் செய்து எங்களுக்கும் வக்கீல் மூலம் நோட்டீஸ் கொடுத்திருந்தார். மேற்படி நிகழ்ச்சி சம்மந்தமாக பூசாரிச் செட்டியார் வகையறா, அருளாடிச் செட்டியார் வகையறா தீர்த்து வைக்கவில்லை.

மேற்படி ஒப்பந்தப் பத்திரத்தின்படி பாக்கித் தொகையைப் பெற்றுக்கொண்டு கிரையம் செய்து தரும்படி பலமுறை நேரில் கேட்டும், கடிதங்கள் மூலமாக தொடர்பு கொண்டும் அவர்களிடமிருந்து எந்தவிதமான பொறுப்பான பதிலும் தரப்படவில்லை.

நகரத்தார் அனைவரும் பழநி வண்டிப்பேட்டை இடம் சம்மந்தமாக விபரமாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கிறோம். நமது நகரத்தார் அனைவரும் ஒன்றுகூடி மேற்படி நல்ல காரியத்தை நிறைவேற்றித்தந்து பழநி நகரத்தார் சங்கத்தின் மூலம் பழநிக்கு பாதயாத்திரை வரும் பக்தகோடிகளுக்கும், காவடி சுமந்துவரும் காவடி சுவாமிகளுக்கும் எங்களால் இயன்ற தொண்டைச் செய்யும் பாக்கியத்தைக் கொடுக்குமாறு தாழ்பணிந்து வேண்டிக்கொள்கிறோம்.

இதுசம்மந்தமாக மேலும் விவரம் வேண்டுவோர் கீழ்க்கண்ட அலைபேசி மூலமும், இணையதளத்தின் மூலமும் தொடர்புகொள்ள வேண்டுகிறோம்.

அலைபேசி எண்கள்: **98426 90235, 94869 93980, 96888 79666, 98421 78565.**

இணையதள முகவரி: **www.palaninagarathar.com**

நன்றி

17-12-2011

இப்படிக்கு,

**நகரத்தார் சங்கம், பழநி.**

சிந்து – பழனி. ✆ 241960.